# ஒரு உரையாடலைத் தொடங்குதல் (Beginning a Conversation)

வார இறுதிநாள் கொண்டாட்டத்தை, எங்களின் பழைய நண்பர்கள் மற்றும் அவர்களுடைய 8 மற்றும் 10 வயது மகன்களுடன் சேர்ந்து நிகழ்த்த நாங்கள் திட்டமிட்டோம். ஏனெனில், அந்த 2 பையன்களையும், நாங்கள் அப்போதுதுதான் முதன்முதலாக சந்திக்கவிருந்தோம். எங்கள் சந்திப்பின்போது, விரைவான அறிமுக நிகழ்ச்சிக்குப் பிறகு, அந்த சிறுவர்கள் இருவரும், தங்களின் மின்னணு (electronic) விளையாட்டு இயந்திரங்களை எடுத்துக்கொண்டு, கூடாரத்திற்குள் சென்று ஐக்கியமாகி விட்டனர். இரவு உணவு நேரத்தில், அவர்கள் 2 தட்டுகளில் தங்களுக்கான உணவை தனியே எடுத்துக்கொண்டு, கூடாரத்திற்குள் இருந்த தேநீர் மேசையில் சென்று அமர்ந்துகொண்டு உண்ணத் தொடங்கினர்.

"அவர்கள் கூச்ச சுபாவம் உடையவர்கள். அதனால்தான் இப்படி!" என்று அவர்களின் அம்மா அப்போது சொன்னார்.

உரையாடல் என்பது கற்றுக்கொடுக்கப்பட்டு பயிற்சி செய்யப்பட வேண்டியதொரு கலை. கலகலவென நன்றாக வாயடிக்கும் இயல்புகொண்ட என் தோழி, தன் மகன்களின் பேச்சு மற்றும் உரையாடல் திறன் தேவையான அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்திருக்கவில்லை; அதாவது ஒரு பந்தை எறிந்து, அதை, கையில் லாவகமாகப் பிடிப்பதற்கு எப்படி பயிற்சி செய்கிறோமோ, அதைப்போல. ஒரு விளையாட்டில், எப்படி பந்தை நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள சில நுட்பங்களைக் கடைபிடிக்கிறோமோ, அதைப்போலத்தான் பெரியவர்கள் மற்றும் புதியவர்களிடம், நம் குழந்தைகள் பேசிப் பழகுவதற்கும் சில வழிமுறைகளைக் கடைபிடிக்கலாம்.

**நலமா!** - உங்களையும் மற்றவர்களையும் முறையாக அறிமுகம் செய்வதே ஒரு கலைதான். புதிய நபரின் எதிரே நின்று, உங்களின் கையை நீட்டி குலுக்கி, "ஹலோ, என்னுடையப் பெயர் முருகன்" என்பதற்கு, அந்த எதிர் நபரின் பதில் இவ்வாறு இருக்க வேண்டும், "ஹலோ, என்னுடையப் பெயர் மணி. உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி".

**ஒரு நண்பரை இன்னொருவரிடம் அறிமுகம் செய்ய வேண்டுமெனில்:** "முருகன், என்னுடைய நண்பரை நீங்கள் இப்போது சந்திக்க வேண்டுமென நான் விரும்புகிறேன் (அல்லது) பிரியப்படுகிறேன். சரவணன், இவர்தான் முருகன்".

**சில கேள்விகள்:** நாம் ஒருவரை முதன்முறையாக சந்திக்கும்போது, சிலவிதமான கேள்விகளை எப்போதும் தயாராக மனதில் இருத்தி வைத்திருந்தால் மிக்க நலம். அதன்மூலம், உரையாடலை எளிதாக நகர்த்திச் செல்ல முடியும். உதாரணமாக;

எங்கே வசிக்கிறீர்கள்?

எவ்வளவு நாட்களாக இங்கே வருகிறீர்கள்? சொந்த வாகனத்திலா? அல்லது பொதுப் போக்குவரத்திலா?

உங்கள் வீட்டில் ஏதேனும் செல்லப் பிராணிகளை வளர்க்கிறீர்களா?

உங்களுடைய பொழுதுபோக்கு என்ன?

உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள்?

உங்களின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்?

இதுபோன்ற அறிமுக கேள்விகளைக் கேட்டு முடித்தப் பின்னர், உங்கள் உரையாடலை தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு எளிய வழிமுறை என்னவெனில், அந்த நபர் நீங்கள் கேட்டவற்றில், எதில் ஆர்வமாக இருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்து, அதுதொடர்பான கேள்விகளை மேலும் கேட்டு, அந்த நபரை தொடர்ந்து பேச வைக்க வேண்டும். உதாரணமாக, தன் குழந்தைகள் குறித்த விபரங்களை பகிர்ந்துகொள்வதற்கு சிலர் ஆர்வமாக இருக்கலாம். அப்போது, அந்தக் குழந்தைகளின் படிப்பு விபரங்கள் மற்றும் அவர்கள் ஆர்வம் காட்டும் துறைகள் குறித்து கேள்விகளைக் கேட்டு, அந்த நபரை தொடர்ந்து பேச வைக்கலாம். இத்தகைய உரையாடல் பயிற்சியை வீடு, பள்ளி மற்றும் இதரப் பொது இடங்களிலும் மேற்கொள்ளலாம்.

**அதற்கும் மேலாக...**

உங்கள் குழந்தைகளிடம் கேள்விகள் கேட்கப்படுகையில், அவர்கள் அதற்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற இரண்டு வார்த்தைகள் தவிர, சற்று கூடுதலான வார்த்தைகளை சேர்த்து பதில் சொல்லும் வகையில் கற்றுக்கொடுங்கள். உதாரணமாக, "உனக்கு விளையாடப் பிடிக்குமா?" என்று உங்கள் குழந்தையிடம் கேட்கப்பட்டால், அதற்கு, "ஆம், எனக்கு டென்னிஸ் விளையாடப் பிடிக்கும். நான் பொதுவாக என் நண்பன் அழகிரியிடமோ அல்லது என் அண்ணன் சுதாகருடனோ, எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள மைதானத்தில் விளையாடுவேன். ஆனால், இப்போது கால்பந்து பருவம்

*(season)* தொடங்கிவிட்டதால், எனது டென்னிஸ் மட்டைகளை எனது அறையின் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு, பல மாதங்களாக ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த கால்பந்தை இப்போது வெளியில் எடுத்து முன்னே வைத்துள்ளேன்"என்பதாக விரிவான பதில் சொல்லும் விதத்தில் பழக்கப்படுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட மூன்றுவித கருத்துக்களைக் கொண்டு, நம்மிடம் உரையாடும் நபரை ஒரு குறிப்பிட்ட நிலைக்குள் கொண்டுவர இயலும். அவரிடம் அடுத்தடுத்த நிலைகளிலான கேள்விகளைத் தொடுக்கலாம். எனவே, 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற ஒற்றை வார்த்தை பதிலுக்கு அடுத்து, முந்தைய பத்தியில் வந்ததைப் போன்று மூன்றுவிதமான கருத்துக்களை சேர்த்து சொல்லும் வகையில், உங்கள் குழந்தைக்கு உரையாடல் பயிற்சியளிக்க வேண்டும்.

மேலும், அந்த மூன்றுவித கருத்துக்களை தெரிவித்தப் பிறகும், உரையாடலை தொடர்ந்து நகர்த்திச் செல்லும் உத்தியாக, முதலில் கேட்டக் கேள்வியை ("உங்களுக்கு விளையாடப் பிடிக்குமா?") இவ்வாறு மாற்றியமைக்கலாம். அதாவது, "உங்களுக்கென்று பிடித்த விளையாட்டு இருக்கிறதா?" என்பதே அது.

பிற மனிதர்களின் மீதான உண்மையான மற்றும் நேர்மையான ஆர்வத்தைக் கொண்டிருப்பதே, நண்பர்களைப் பெறுவதற்கான மிக முக்கியமான ஒரு வழி. உங்கள் குழந்தை கூச்ச சுபாவத்துடன் இருந்தால், அதை அப்படியே கண்டுகொள்ளாமல் விட்டுவிடாதீர்கள். உரையாடல் எனும் கலையை குழந்தைக்கு அறிமுகம் செய்து, அதைக் கற்றுக்கொள்ள உதவுங்கள். இந்தக் கலையானது தொடர் பயிற்சியின் மூலமே, குழந்தைக்கு நன்றாக கைக்கூடுகிறது.

***************


*மூல ஆங்கிலக் கட்டுரை:* ***Maren Schmidt (மாண்டிசோரி ஆய்வாளர்)***

*தமிழ் மொழிபெயர்ப்பு: சொ.பிரசன்ன பாரதி (ரிலீஃப் ஃபவுண்டேஷன், சென்னை)*

*மேலதிக விபரங்களுக்கு: www.relieffoundation.in*